Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 ..... பிறக்கப் போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள். சங். 22: 31 ஆகஸ்டு 2024 No.8

தேவனிடம் கிட்டிச் சேரும் ஜெபம்

Prayer that reaches God

R.C. Ryle (1816-1900)

ஜெபிக்கிறவர்களுக்கு இதனை எழுதுகிறேன். இதை வாசிக்கிற அனேகருக்கு ஜெபம் என்றால் என்ன என்பது தெரியும். அவர்கள் ஜெப ஆவியை உடையவர்கள். சில அன்பான ஆலோசனைகளை இங்கு தர விரும்பு கிறேன். ஆசரிப்புக்கூடாரத்தில் ஏறெ டுக்கப்பட்ட தூபத்தில் குறிப்பிட்ட வகையான பொருட்களே சேர்க்கப் பட்டன. அவை விசேஷித்த குறிப்பிட்ட நறுமண பொருட்களால் செய்யப் பட்டது. எனவே நாம் ஜெபிக்கும் விஷயங்கள் விதங்கள் யாவற்றிலும் கவனமாயிருப்பது அவசியம்.

1. ஜெபத்தில் கனமும் தாழ்மையும் முக்கியமானவை

நாம் எப்படிப்பட்டவர்கள் என்றும், தேவனோடு பேசுவது எத்த கைய விலையேறப்பெற்ற அனுபவம் என்பதையும் உணரவேண்டும். ஆத்திரத் தோடும் கவலையீனத்தோடும் அவர் சமுகத்தில் வரலாகாது. "நான் பரிசுத்த பூமியிலிருக்கிறேன், இது வானத்தின் வாசலேயல்லாமல் வேறல்ல என் உள்ளத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனா னால் தேவரீர் என் ஜெபத்தை கேளீர்." (யாத்.3:5, ஆதி.28:17, சங்.66:18) என்று எண்ணியபடியே ஜெபிக்க வேண்டும். சாலமோனுடைய வார்த்தைகளையும் எண்ணிப் பார்க்க லாம். "தேவ சமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசா மலும், மனம் பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும், இரு; தேவன் வானத்தி லிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய்; ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமா யிருப்பதாக" (பிர.5:2). ஆபிரகாம் தேவனிடத்தில் பேசிய போது; "...இதோ தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன்" என்று தன்னைத் தாழ்த்தினான். யோபு தேவனிடம் "இதோ நான் நீசன்" (யோபு40:4) என்றான். நாமும் நம்மைத் தாமே தாழ்மைப்படுத்துவோம்.

2. ஆவிக்குரியபடி ஜெபிப்பதின் முக்கியத்துவம்

நம்முடைய ஜெபங்களில் ஆவி யானவரின் நேரடி உதவிக்காக பிரயாசப் பட வேண்டும். மேலும் கடமைக்காக ஜெபிப்பதை குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குறிப்பாக தனி ஜெபத்தை குறித்து நாம் உண்மையா யிருக்க வேண்டும். வழக்கமாக சில வேத வார்த்தைகளை பயன் படுத்தி ஜெபிப் பதைவிட்டு இருதயத்தின் ஆழத்தி லிருந்து உணர்ந்து ஜெபிப்பதை அனுதின பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

நமது அனுதின தேவைகளை கூறி தினமும் ஜெபிப்பதில் அர்த்தமில்லை. உலகம், மாம்சம், பிசாசு ஆகியவை என்றும் நமக்கு எதிரானவை. எனவே நமது அன்றாட ஜெபங்கள் ஒன்று போலிருந்தாலும் நாம் தேவ ஆவியான வரின் ஒத்தாசையோடு வேண்டுதல்களை எறெடுக்க பிரயாசப்படுவோம்.

3. ஜெபிப்பதே வாழ்வின் அன்றாட முக்கிய வேலையாயிருக்கட்டும்

ஜெபத்திற்கான ஒழுங்கான சமயத்தைக் கொடுப்பது மதிப்பிற் குரியது. தேவன் ஒழுங்கிற்குரியவர். யூத ஜெபாலயங்களில் காலை மாலை பலிகள் ஏறெடுக்கப்பட்டது. ஒழுங்கின்மை பாவத்தின் கனிகளில் ஒன்று. ஆத்து மாவின் ஆரோக்கியத்திற்கு ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட பகுதி ஜெபத்திற் காக ஒதுக்கப்பட வேண்டும். நாம் சாப்பிடவும், தூங்கவும், வேலை செய்யவும் சமயம் அளிப்பது போல, ஜெபத்திற்கும் சமயம் அளிப்பது அவசியம். அதற்கு ஒரு சமயத்தை நீங்களே தெரிவு செய்யலாம். உலகத் தோடு பேசுவதற்கு முன்னால் அவரோடு பேசுங்கள். வேலைகள் முடிந்த பின் இரவிலும் பேசுங்கள். ஆனால் அது மிக முக்கியமானது என்பது மனதிலிருக் கட்டும். எந்த வேலையைக் காட்டிலும் ஜெபம் மிக முக்கியமானது.

4. விடாப்பிடியாக ஜெபிக்க வேண்டும்

பழக்கத்தை மாற்றாமல் ஜெபிக்க வேண்டும். குடும்பமாக ஜெபித்தது போதும், தனி ஜெபம் தேவையில்லை என்ற எண்ணம் நமக்குள்ளே வரலாம். அல்லது இன்று மிக முக்கியமான காரியங்கள் இருக்கின்றன. அதனால் ஜெபத்தை சற்றுக் குறைத்துக் கொள்ள லாம் என்ற சிந்தனை வரலாம் இவை யெல்லாம் சாத்தானுடைய ஆலோசனை கள். நமது ஆத்துமாவை உதாசீனப் படுத்துபவை.

எப்போதும் நீண்ட ஜெபம் அவசியமில்லை. ஆனால் சாக்குப் போக்குகளால் ஜெபத்தைக் குறைக்க வேண்டாம். **'இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்'** (கொலோ.4:2 மற்றும் 1 தெச. 5:17) ஆகிய வசனங்களில் பவுல் சொல்லும் போது நாம் எப்போதுமே முழுங்காலில் நின்று கொண்டிருக்க வேண்டுமென்பது அதன் கருத்தல்ல... நாம் தினந்தோறும் ஒழுங்காக ஜெபிப்பதை அவர் தூண்டு கிறார். அது விதைப்பும் அறுப்பும் போலவும் வேனிற்காலம் குளிர்காலம் போலவும், பலிபீடத்தின் அக்கினி போலவும் ஒழிந்து போகாதிருக்க வேண்டும்.

அதோடு காலை மாலை தியானங்களையும் இடைவேளை ஜெபங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். மேலும் வேலை ஸ்தலத் திலும், தெருக்களிலும், நாமிருக்குமிடத் திலும் நமது வேண்டுதல்களை நெகேமியா அர்தசஷ்டா ராஜாவுக்கு முன் ஏறெடுத்தது போல ஏறெடுக்கலாம்.

5. ஜெபத்தில் உத்தமம் வேண்டும்

அதிக சத்தமாக ஜெபிப்பதால் உத்தமத்தை வெளியிட முடியாது. இதய பூர்வமான அனலுள்ள ஜெபம் தேவை. 'நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதா யிருக்கிறது.' (யாக்.5:16)

ஜெபத்திற்கு கண்ணீர் விடுதல், தட்டுதல், தேடுதல், போராடுதல், உழைத்தல் என்ற பதங்கள் பயன் படுத்தப்படுகின்றன. உதாரணங்கள் சிலவற்றைக் கீழே காணலாம். பெனி யேல் என்ற இடத்தில் யாக்கோபு தூதனிடம், "...நீர் என்னை ஆசீர்வதித்தா லொழிய உம்மைப் போக விடேன் என்றான்".(ஆதி.32:26) தானியேலு டைய ஜெபத்தையும் பார்ப்போம். "ஆண்ட வரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும், என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதைத் தாமதி யாமல் செய்யும்..." (தானி.9:19). இயேசு கிறிஸ்துவின் ஜெபத்தைக் குறித்து: எபி.5:7-ல் "அவர்...பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும், விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு..." என்று படிக்கிறோம்.

நம்முடைய ஜெபங்கள் இப்படி இல்லையே எவ்வளவு வெதுவெதுப்பாய் அவை காணப்படுகின்றன! நம்மில்

(4-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அறிவிப்பு

வங்கி வழியாக (Net Banking) காணிக்கை அனுப்பிய வாசகர்கள் உடனே எங்களுக்கு Phone பண்ணுங்கள் அல்லது SMS or Whatsapp அனுப்புங்கள்.

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

" **நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜ்வாலை உன் பேரில் பற்றாது**". ஏசாயா 43: 2

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2024 ஆகஸ்டு மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், '**வெகுமனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்**' துதிக்கிறேன்.

முதலாவது ஒரு சின்ன சம்பவத்தை எழுதுகிறேன்:

தமஸ்குவிலே அனனியா என்னும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: அனனியாவே, என்றார். அவன்: ஆண்டவரே, இதோ, அடியேன் என்றான்.

அப்பொழுது கர்த்தர்: நீ எழுந்து நேர் தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; **அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்.**

அவன் புற ஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக **நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்.**

அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார் அப்.9:10-16.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்.

என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளைச் சொன்னேன். **உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு,** ஆயினும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். யோவான் 16:31-33.

நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் எசே. 22:30.

எஸ்றா இப்படி விண்ணப்பம் பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்து கிடக்கையில், ... மகா பெரிய சபை அவனிடத்தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும் அழுதார்கள் எஸ்றா 10:1.

இம்மாதம் எஸ்றாவின் புத்தகத்திலிருந்து ஏழு குறிப்புகளை சிந்திப்போம்.

1. ஆவியை ஏவினார்

எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, ... கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் **ஆவியை ஏவினதினாலே** அவன்:

பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

... என்று தன் ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணுவித்தான். எஸ்றா1:1-4.

அப்போழுது எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்குப் போகும்படி ... **எவர்கள் ஆவியைத் தேவன் ஏவினாரோ** அவர்கள் எல்லாரும் எழும்பினார்கள். எஸ்றா1:5.

அவர்களைச் சுற்றிலும் குடியிருக்கிற யாவரும் மன உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்ததுமன்றி, ... உசிதமான பொருட்களையும் கொடுத்து, அவர்கள் கைகளைத் திடப் படுத்தினார்கள் எஸ்றா1:6.

ராஜாவாகிய தரியு அரசாளுகிற ஆறாம் வருஷம் ஆதார் என்னும் மாதம் மூன்றாந் தேதியிலே அந்த ஆலயம் கட்டி முடிந்தது எஸ்றா 6:15.

2. உத்தம வேத பாரகனாகிய எஸ்றா

எஸ்றா ஏழாம் அதிகாரம் "இந்த வர்த்தமானங்களுக்குப் பின்பு, செராயாவின் குமாரனாகிய எஸ்றா, பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா அரசாளுகிற காலத்திலே பாபிலோனிலிருந்து வந்தான்" என்று ஆரம்பிக்கிறது. எஸ்றா 7:1.

... எஸ்றா என்னும் ஆசாரியனுக்கு, ராஜாவாகிய அர்தசஷ்டா கொடுத்த சன்னதின் நகலாவது:

ராஜாதி ராஜாவாகிய அர்தசஷ்டா பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கிற **உத்தம வேத பாரகனாகிய எஸ்றா** என்னும் ஆசாரியனுக்குப் பூரண சமாதான முண்டாக வாழ்த்தி எழுதுகிறது என்னவென்றால்: எஸ்றா 7:11,12.

பாபிலோன் சீமையெங்கும் உனக்குக் கிடைக்கும் எல்லா வெள்ளியையும் பொன்னையும், உன்னுடைய ஜனமும் ஆசாரியரும் எருசலேமிலுள்ள தங்கள் தேவனுடைய ஆலயத்துக்கென்று மன உற்சாகமாய்க் கொடுக்கும் காணிக்கைகளையும் நீ கொண்டு போகவும், நீ ராஜாவினாலும் அவருடைய ஏழு மந்திரிமாராலும் அனுப்பப்படுகிறாய் எஸ்றா 7:16.

'உத்தம வேத பாரகனாகிய எஸ்றா' என்று பெர்சியாவின் ராஜாவால் எஸ்றா நற்சாட்சி பெற்றது போல நம்மைச் சுற்றிலும் உள்ள கிறிஸ்தவர் அல்லாதவர், கிறிஸ்தவர்களாகிய நம்மைப் பார்த்து இவர்கள் உத்தம கிறிஸ்தவர்கள், பரிசுத்தவான்கள் என்று சாட்சி கொடுப் பார்களா?

3. உபவாசம்

பாபிலோனிலிருந்து புறப்பட்ட எஸ்றாவும் ஜனங்களும் செய்ததென்ன?

"அப்பொழுது நாங்கள் எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களைத் தாழ்த்துகிறதற்கும், எங்களுக்காவும் எங்கள் பிள்ளைகளுக்காகவும் எங்கள் சகல பொருள்களுக்காவும்

(3-ம் பக்கம் பார்க்க)

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வையான வழியைத் தேடுகிற தற்கும் நான் அங்கே அந்த அகாவா நதி யண்டையிலே **உபவாசத்தைக்** *கூறினேன்.*

அப்படியே நாங்கள் **உபவாசம் பண்ணி,** *எங்கள் தேவனிடத்திலே அதைத் தேடினோம்; எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்."எஸ்றா 8:21-23.*

ஆண்டவராகிய இயேசு

அவர் (இயேசு) இரவும் பகலும் நாற்பது நாள் **உபவாசமாயிருந்த** *பின்பு, அவருக்கு பசியுண்டாயிற்று மத்.4:2.*

அன்னாள்

ஆசேருடைய கோத்திரத் தாளும், பானுவேலின் குமாரத்தி யுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்;

ஏறக்குறைய எண்பத்து நாலு வயதுள்ள அந்த விதவை தேவால யத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் **உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை** *செய்து கொண்டிருந்தாள். லூக். 2:36,37.*

And she was a widow of about fourscore and four years, which departed not from the temple, but served God with fasting and prayers night and day.

சபை

அவர்கள் கர்த்தருக்கு ஆரா தனை செய்து, உபவாசித்துக் கொண்டி ருக்கிற போது: ... பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்.

அப்பொழுது **உபவாசித்து** *ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள். அப்.13:2,3*

கொர்நேலியு

... நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் ... இருந்தான்.

அவன் தேவ பக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவ னுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங் களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான்.

அதற்குக் கொர்நேலியு நாலு நாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் **உபவாசித்து,** *ஒன்பதாம் மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தேன் என்றான். அப்.10:1,2,30.*

4. ஜனங்களின் பாவம்

இவைகளை செய்து முடிந்த பின்பு, பிரபுக்கள் என்னிடத்தில் சேர்ந்து: இஸ்ரவேல் ஜனங்களும், ஆசாரி யரும் லேவியரும் ஆகிய இவர்கள், கானானியர், ஏத்தியர், பெரிசியர், எபூசியர், அம்மோனியர், மோவாபியர், எகிப்தியர் என்னும் **இந்தத் தேசங்களின் ஜனங்களுக்கும், அவர்களுடைய அருவருப்பு களுக்கும் விலகியிருக்கவில்லை.**

எப்படியென்றால், அவர்களு டைய குமாரத்திகளிலே தங்களுக்கும் தங்கள் குமாரருக்கும் பெண்களைக் கொண்டார்கள்; இப்படியே பரிசுத்த வித்துத் தேசங்களின் ஜனங்களோடே கலந்து போயிற்று; பிரபுக்களின் கையும், அதிகாரிகளின் கையும், இந்த குற்றத்தில் முந்தினதாயிருக்கிறது என்றார்கள். எஸ்றா 9:1,2.

5. எஸ்றா தீகைத்தவனாய் உட்கார்ந் தார்

இந்த வர்த்தமானத்தை நான் கேட்ட பொழுது, என் வஸ்திரத்தையும் என் சால்வையையும் நான் கிழித்து, என் தலையிலும் என் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கித் திகைத்தவனாய் உட்கார்ந்திருந்தேன்.

அப்பொழுது சிறையிருப்பி லிருந்து வந்தவர்களுடைய குற்றத்தினி மித்தம் இஸ்ரவேலுடைய தேவனின் வார்த்தைகளுக்கு நடுங்குகிற யாவரும் என்னோடே கூடிக் கொண்டார்கள். எஸ்றா 9:3,4.

6. எஸ்றா ஜெபித்தார்

அந்திப்பலி நேரத்திலே நான் துக்கத்தோடே எழுந்து, கிழித்துக் கொண்ட வஸ்திரத்தோடும் சால்வை யோடும் முழங்காற்படியிட்டு, என் கைகளை என் தேவனாகிய கர்த்தருக்கு நேராக விரித்து:

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் நீதியுள்ளவர்; ஆகையால் இந்நாளில் இருக்கிறது போல, நாங்கள் தப்பி மீந்திருக்கிறோம்; இதோ, நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளான வர்கள்; இதினிமித்தம் நாங்கள் உமக்கு முன்பாக நிற்கத்தக்கவர்கள் அல்ல என்று பிரார்த்தித்தேன். எஸ்றா 9:5-15 படிக்கவும்

7. எஸ்றா அழுதார்

எஸ்றா இப்படி விண்ணப்பம் பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனு டைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்து கிடக்கையில், இஸ்ரவேலில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவனிடத்தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும் அழுதார்கள் எஸ்றா 10:1

1. எஸ்றா அழுதார், ஜனங்கள் மிகவும் அழுதார்கள். 10:1

2. எங்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம் என்றார்கள். 10:2

3. தேவனோடே உடன்படிக்கை பண்ணி னார்கள். 10:3

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, ஜனத்தின் பாவத்திற்காக எஸ்றாவைப் போல ஆண்டவருடைய பாதத்தில் விழுந்து அழுவீர்களா?

என் ஜனம் பாவத்தில் மாள்கிறதே
என் உயிர் தந்தேன் மன்னுயிர்கே
என் துயர தொனியோ இதை யார் இன்று கேட்பாரோ
என் காரியமாக யாரை அழைப்பேன்
என்றீரே வந்தேனிதோ
அழைத்தீரே ஏசுவே
அன்போடே என்னை அழைத்தீரே
ஆண்டவர் சேவையிலே மரிப்பேனே
ஆயத்தமானேன் தேவே
தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக
தேவ கிருபை உங்களோடிருப்பதாக

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008

உங்கள் அன்பு சகோதரன்
வெஸ்லி தேவதாசன்

வாசகர் கவனத்திற்கு . . .

அநேக வருடங்களாய், மாதந்தோறும் பத்திரிகை ஊழியத்தை ஜெபத்தாலும் பொருளாலும் தாங்குங்கள் அல்லது வருடம் ஒரு முறையாகிலும் ரூபாய் 500 காணிக்கை அனுப்பி ஊழியத்தை தாங்குங்கள் என்று எழுதின பின்பும், குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு வெகு குறைவானவர்களே மாதம் தோறும் அல்லது வருடத்திற்கு ஒரு முறை காணிக்கை அனுப்புகிறார்கள். உதாரணமாய் மாதம் தோறும் சில ஆயிரம் பத்திரிகை அனுப்பினால், நூற்றுக்கணக்கானவர்களே காணிக்கை அனுப்புகிறார்கள். **ஜூலை மாத பத்திரிகை தபால் துறையால் இரண்டு மடங்கு தபால் தலை ஒட்ட சொல்லி திரும்ப அனுப்பப்பட்டது.** *ஏற்கெனவே தபால் சலுகைகள் ரத்து செய்யப்பட்டு இரண்டு மடங்கு தபால் தலை ஒட்ட சொல்லி யிருந்தார்கள். தற்போது நான்கு மடங்கு தபால் தலை ஒட்ட வேண்டியுள்ளது. எனவே வாசகர்கள் இதை கருத்தில் கொண்டு செயல்பட, ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.*

அன்புடன், S. சாமுவேல் பின்னி

இப்பத்திரிகையின் வருட சந்தா ரூ.100 என்று அச்சிட்டு அனுப்பி வந்ததை வாசகராகிய நீங்கள் அறிவீர்கள். சில ஆண்டுகளுக்கு முன் நம்முடைய பத்திரிகைக்கு **தபால் சலுகை** நிறுத்தப்பட்டது. இது போல சலுகையை இழந்தவர்கள் என்ன செய்கிறார்கள்?

1. நான் விரும்பி வாசிக்கும் ஒரு கிறிஸ்தவ பத்திரிகை, தபால் சலுகையை இழந்த தினால் **மாதந்தோறும்** காணிக்கை அனுப்புகிறவர்களுக்கு மட்டும் அனுப்புகிறார்கள்.

2. நான் விருப்பமாய் வாசிக்கும் இன்னொரு பத்திரிகையை வெளியிடும் எனக்கு அறுமுகமான ஒரு ஊழியர், தபால் சலுகையை இழந்ததினால் **இரண்டு மாதத்திற்கு ஒரு முறை** பத்திரிகை வெளியிடுகிறார். அதாவது **JANUARY - FEBRUARY** என்று அச்சிட்டு அனுப்புகிறார்.

3. கொரோனா வியாதிக்குப்பின் வருகையின் தூதன் ஆங்கில பதிப்பு உட்பட பிற மொழிகள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வெளியிடுகிறார்கள்.

மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் வெளியிடப்படும் வருகையின் தூதன் பத்திரிகையை, மாதந்தோறும் அச்சிட்டு உங்களுக்கு அனுப்ப, **மாதந்தோறும்** தாங்குங்கள். மாதந்தோறும் அனுப்ப இயலாதவர்கள், வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அநேகர் "நாம் ஜெபிக்கிறவைகளையே நாம் விரும்புவதில்லை" என்று நம்மை பார்த்து கர்த்தர் சொல்ல கூடும். இந்த குறையை திருத்த முயற்சிப்போம். கிருபையின் வாசலை பெலமாகத் தட்டுவோம் அல்லது வழியில் அழிந்து போவோம். நமது குளிர்ந்த ஜெபங்கள் நெருப்பில்லாத பலிகளாயிருக்கின்றன.

6. விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும்

"ஆதலால் நீங்கள் ஜெபம் பண்ணும் போது எவைகளை கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்..." (மாற்கு 11:24) வில்லுக்கு அம்பு எவ்வளவு பயனுள்ளதோ அதே போல் ஜெபம் கேட்கப்பட விசுவாசம் அவசியம். ஆண்டவருடைய வாக்குத்தத் தங்களைக் குறிப்பிட்டு நாம் ஜெபிக்க வேண்டும். இவ்வாறு தான் யாக்கோபு, மோசே, தாவீது போன்றவர்கள் ஜெபித் தனர். 119-ம் சங்கீதம் முழுவதிலும் 'உம்முடைய வசனத்தின்படி' என்ற சொற்றொடர் நிறைந்துள்ளது.

நாம் ஜெபத்திற்கான பதிலை எதிர்பார்க்க வேண்டும். பதில் வரும் வரை திருப்தியடையக்கூடாது. ஜெபத்தில் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்களைக் குறித்து கவலையீனமாயிருப்பவர்கள் ஜெபத்தில் உறுதியாயிருக்க முடியாது.

7. ஜெபத்தில் தைரியம் வேண்டும்

தூய்மையோடு கூடிய ஒரு தைரியம் ஜெபத்தில் இருக்க வேண்டும். மோசே தேவனிடத்தில் இஸ்ரவேலரை அழிக்கக் கூடாது என ஜெபித்த போது "...மலைகளில் அவர்களைக் கொன்று போடவும், பூமியின் மேல் இராதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கவும் ...என்று எகிப்தியர் சொல்லுவானேன். உம் முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பும்." (யாத். 32:12) என்று ஜெபித்தான். இஸ்ரவேலர் ஆயி மனுஷ ருக்கு முன்பாக முறியடிக்கப்பட்ட போது யோசுவா தைரியத்தோடு பண் ணின ஜெபம்: "அப்பொழுது உமது மகத் தான நாமத்துக்கு என்ன செய்வீர்?"

இவ்விதமான தைரியம் **ஸ்தேவானுடைய** வாழ்க்கையில் காணப்பட்டது. அவர் ஜெபித்ததை கேட்ட ஒருவர் "இவர் எப்படிப்பட்ட ஆவியை உடையவர். அவர் தோற்றத்தில் எவ்வளவு உறுதி! மிகுந்த கனத்துடன், தேவனுடன் ஒருவர் இரந்து கேட்பது போலவும் ஆனால் நம்பிக்கை உறுதியுடனும் ஒரு அன்பான தகப்பனுடனோ சினேகிதனுடனோ பேசுவதைப் போல ஜெபிக்கிறார்" என்று கூறினார். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்காட்லாந்தை சார்ந்த **புரூஸ்** என்ற தேவ மனிதன் ஜெபித்த ஜெபங்கள் "பரத்துக்கு எதிரே எய்யப்பட்ட கூரா ணிகள்" என்று விமர்சிக்கப்பட்டன.

விசுவாசிக்கு இருக்கும் சாவகா சங்களை நாம் போதுமான அளவு உணருவதில்லை. ஆண்டவரே நாங்கள் உமது ஜனமல்லவா? நாங்கள் பணி செய்வது உமது நாம மகிமைக்காக அல்லவா? சுவிசேஷம் பெருகுவது உமது நாமம் மகிமைப்பட அல்லவா? என்று ஜெபிப்போம்.

8. ஜெபத்தில் முழுமை மிக அவசியம்

பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று எண்ணிய பரிசேயரை ஆண்டவர் எச்சரித்தார். அதே வேளையில் நீண்ட பெரிய தியானங்களையும் இரவு முழுவதும் ஜெபத்தில் செலவு செய்வதையும் அவர் ஆதரித்தார்.

அனேக விசுவாசிகள் மிகக் குறைவாக ஜெபிக்கிறார்கள். தனி ஜெபத் திற்குக் கொடுக்கப்படும் சமயம் மிகவும் குறைவு. ஏனெனில் அவர்கள் தேவனிடம் குறைவாகவே பெற்றுக் கொள்ள எண்ணுகிறார்கள். அவர்கள் குறைவாக அறிக்கை செய்து, குறைவாகவே கேட்டு, குறைவாக நன்றி சொல்லுகிறார்கள்.

விசுவாசிகள் தாங்கள் விரும்பு வது போல வளர முடியவில்லை என பராது சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் எவ்வளவாகக் கேட்டிருப் பார்கள்? அவர்கள் பெற்றுக் கொள்ள வில்லையென்றால் அதற்குக் காரணம் அவர்களுடைய குறுகிய, கத்திரிக்கப் பட்ட, மிக வேகமான, ஒடுங்கிய ஜெபங் கள்தான். அவர்கள் கேட்காதபடியினால் அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை.

ஆண்டவர் நம்மைப் பார்த்து "உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்" (சங். 81:10) என்கிறார். நாம் இஸ்ரவேலின் ராஜாவைப் போல ஐந்து ஆறு தடவைகளுக்குப் பதிலாக மூன்று தடவைகள் மட்டும் தரையில் அடித்து நிறுத்தி விடுகிறோம். (2 இரா.13:4-19).

9. குறிப்பிட்ட காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டும்

பொது ஜெபங்களில் நாம் திருப் தியடையக் கூடாது. இரக்க ஆசனத்தின் முன்னால் தேவைகளைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். நான் பாவி என்று அறிக்கையிட்டால் போதாது. பாவங் களை ஒவ்வொன்றாய் அறிக்கையிட வேண்டும். தூய்மை வேண்டுமென்று ஜெபிக்கிற நாம் எதில் குறைவுபட்டிருக் கிறோம் என்று சொல்ல வேண்டும். துன்பத்திலிருக்கிறோம் என்று சொல்லுகிற நாம், நமது துன்பத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஏசா தான் யாக்கோபுக்கு பயப்படுவதை குறிப்பாக எடுத்துக் கூறினான் (ஆதி.32:11). எலியேசர் தன் எஜமானுக்கு ஒரு மனைவியைத் தேடிய போது அவனது தேவையை எடுத்துச் சொன்னான் (24:12). பவுல் தனது மாம்சத்திலிருந்த முள்ளுக்காக இவ்விதமாக ஜெபித்தார் (2 கொரி. 12:8). இதுவே உண்மையான விசுவாசமும் நம்பிக்கையுமாகும்.

ஆண்டவருக்கு முன்னால் சிறியவை என்று குறிப்பிடுவதற்கு எதுவுமே இல்லை. மருத்துவரிடம் சென்றால் சுகவீனம் என்று சொன்னால் மட்டும் போதுமா? மனைவி கணவனிடம் நான் துக்கமாயிருக்கிறேன் என்றால் காரணம் சொல்ல வேண்டாமா? குழந்தை தந்தையிடம் நான் குழப்பத்திலிருக் கிறேன் என்றால் தந்தை என்ன செய்ய முடியும்? கிறிஸ்துவே ஆத்துமாவின் உத்தம மணவாளன். இதயத்தின் சிறந்த மருத்துவர், எல்லா மக்களுக்கும் ஏற்ற தந்தை. எந்த இரகசியத்தையும் மூடி மறைக்காமல் நமது இருதயங்களைத் திறந்தளிப்போம்.

10. ஜெபத்தில் மன்றாட்டு அவசியம்

மனந்திரும்பினாலும் நமது சுய நலம் நம்மை விட்டுப் போகவில்லை. நமது ஆத்துமாக்கள், நமது போராட் டம், நமது முன்னேற்றம் என்று எண்ணி பிறரை மறந்து விடுகிறோம். இந்த சுய நலம் நம்மை விட்டு அகல வேண்டும். நமது பெயர்களையே பெரிதுபடுத்தக் கூடாது. உலகத்துக்காகவும், விசுவாசி களுக்காகவும், தேசத்துக்காகவும், சிநேகி தருக்காகவும், தொடர்புள்ள யாவருக் காகவும் ஜெபிக்க வேண்டும்.

இது உயரிய தயாள சிந்தை. நமது ஆத்தும ஆரோக்கியத்திற்கு இது நலமானது. நமது இரக்கத்தை விசாலப் படுத்தி இருதயங்களையும் அகலமாக்கு கிறது. இது சபைக்கு ஆதாயமானது. ஜெபத்தினால் தான் சுவிசேஷப் பணிகள் இயங்குகிறது. தேவனுக்காக மோசேயை போல பரிந்து பேசுகிறவர்களும் யோசு வாவை போல் போராடுகிறவர்களும் கர்த்தருடைய காரியத்திற்காக அதிகம் செய்கிறார்கள். இவ்வாறு நாம் இயேசுவைப் போல பணி செய்யும் சிலாக்கியத்தைப் பெறுகிறோம். நம்மை ஆண்டவர் பிரதான ஆசாரியர்களாக வைத்திருக்கிறார். இது ஊழியர்களுக்கு நாம் ஜெபத்தினால் செய்யும் உதவி.

11. ஜெபம் நன்றி நிறைந்ததாயிருக்க வேண்டும்

கேட்பதும் நன்றி சொல்வதும் வித்தியாசமான காரியங்கள். ஆனால் வேத புத்தகத்தில் கேட்பதும் நன்றி சொல்வதும் நெருக்கமானவை. எனவே உத்தம ஜெபத்தில் நன்றி சொல்லுதல் அதிக இடம் பெற வேண்டும். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லா வற்றையும் குறித்து, உங்கள் விண்ணப் பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி.4:6). "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" (கொலோ.4:2).

தேவனுடைய இரக்கத்தினாலே நாம் நரகத்துக்குத் தப்பி, பரலோக நம்பிக்கை உடையவர்களாயிருக்கி றோம். ஆவியால் அழைக்கப்பட்டு நமது வழிகளுக்கேற்ற பலனை அடைய வில்லை. தேவனை மகிமைப்படுத்தும் வாய்ப்புகளைப் பெறுகிறோம். அவரு டைய இரக்கங்களுக்காக அவரைத் துதியாமலிருப்பது கூடாது. அவர் கிருபை என்றுமுள்ளது.

பக்தர்கள் யாவரும் நன்றி நிறைந்தவர்களாயிருந்தனர். பவுலின்

(5-ம் பக்கம் பார்க்க)

ஜான் ஃபிரளச்சர் - தேவனோடு நடந்த ஒரு மனிதர்

John Fletcher - A man who walked with God

Oswald J.Smith

(கடந்த மாத தொடர்ச்சி)

துன்பத்தின் கூளை

அவரது மிகவும் நல்ல ஆவிக்குரிய செய்திகள் அவரது உதடுகளுலிருந்து வெளி வந்தவை அவருடைய பயங்கரமான வியாதியாகிய காச நோயோடு தொடர்புள்ளவை. அவர் காச நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். உச்ச நிலையில் சோதிக்கப்பட்டு தகுதி பெற்றவராக வெளி வர இந்த நோய் ஏதுவாயிற்று. இந்த சமயத்தில் அவர் எழுதிய கடிதங்கள் நமக்குப் பிரயோஜனமானவை.

"நான் வாழ்நாள் மிகக் குறுகியது என்றும் காலம் மிக வேகமாகக் கடந்து போகிறது என்றும் கண்டு, சமயத்தை நான் பயபக்தியுடன் சந்தோஷமாக செலவு பண்ண வேண்டும்." ஆனால் ஒரு மனிதனுக்கு வெளிப்படையான தொழில் அவசியம். முக்கியமானது என்ன வென்றால் நம்மை நாமே பிரயோஜன மாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

"எனது தொண்டை பிரசங்கிப் பதில் கடுமையாக செயல்பட உரு வாக்கப்படவில்லை. தொடர்ந்து மூன்று நான்கு முறைகள் பிரசங்கித்தது அதைப் புண்படுத்தியது. எனவே எனது சமயத்தில் சிறுபகுதியை எழுதுவதற் காக பயன்படுத்தினேன். நான் தேவ மகிமைக்காக இதைச் செய்ய தேவன் உதவி செய்யட்டும்."

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நிரூபங்கள் ஸ்தோத்திரத்தோடே ஆரம் பிக்கின்றன. நாம் உலகுக்கு ஒளியாகப் பிரகாசிக்க துதிக்கும் ஆவியுடையவர் களாயிருக்க வேண்டும்.

12. ஜெபத்தைக் குறித்த விழிப்புணர்வுடையவர்களாயிருக்கவேண்டும்

இங்கு தான் உண்மையான மார்க்கம் இருக்கிறது. இங்கு தான் அதிக விழிப்புடனிருக்க வேண்டும். ஒருவரது ஜெபத்திலிருந்து அவரது ஆத்தும நிலையை நாம் அறிந்து கொள்ளலாம். ஜெபம் ஆவிக்குரிய நாடித்துடிப்பு. இதனால் நமது ஆவிக்குரிய ஆரோக்கியம் சோதிக்கப்படுகிறது.

எனவே நமது தனி ஜெபத்தில் கவனமாயிருப்போம். இதில் தான் நமது செயல்படும் கிறிஸ்தவ வாழ்வின் இருதயம் அமைந்திருக்கிறது. பிரசங் கங்கள், புத்தகங்கள், கைப்பிரதிகள், குழு கூடுகைகள், நல்ல மக்களின் கூட்டுறவு எல்லாம் நல்லவை தான். ஆனால் ஜெபம் அவற்றிற்கு ஈடாகாது. தேவனோடுள்ள தொடர்பு இன்றியமையாதது. ஜெபத்தைக் கூட்டுங்கள். நண்பர்களும், வேலை களும் தேவனோடு பேசுவதற்குத் தடை யாயிருக்க வேண்டாம். ஜெபிக்கும் விஷயத்தில் நீங்கள் கவனமாயிருந்தால் ஆத்துமா எல்லா நன்மைகளையும் பெற்றுக் கொள்ளும்.

"நான் தேவனிடம் அவரது ஆலோசனையின்படி எங்கேயாவது போகவோ, போகாமலிருக்கவோ ஏதாவது செய்யவோ ஒன்றும் செய்யாம லிருக்கவோ என்னை வழி நடத்தும் படி கெஞ்சிக் கேட்டேன்."

"வாழ்கை எவ்வாறு செல்லு கிறது! நான் நடந்தேன் இப்போது நான் நித்தியத்திற்குள் குதிக்கிறேன். வாழ்வின் பாத்திரம் செங்குத்தான குன்றில் கீழாக வேகமாகச் செல்லுகிறது. நாம் ஞானமா யிருப்போமாக. நமது விளக்குகளை தூண்டி விடுவோம். நம்மை அவருக்கு அர்ப்பணிப்பதில் தொடருவோம். அதுவே இதுவரை நம்மை நடத்தியது தொடர்ந்து நம்மை அர்ப்பணிப்போம்".

"உங்கள் இருதயம், பேனா, நாவு இவை என்ன செய்கின்றன? அவைகள் உங்கள் வட்டாரத்தில் சத்தியத்தைப் பரப்ப முத்திரையைப் பெறுகிறதா?"

"நண்பனே, உலகத்தைக் குறித்து எச்சரிக்கையாயிரு! அதின் கவலைகளும் ஐசுவரிய மயக்கங்களும் உன்னை இயேசு விடமிருந்து பிரிக்க வேண்டாம். காலம் பறந்து செல்கிறது நித்தியத்திற்கு நேராக நாம் விரைந்து செல்லும் முன் அதிக செழிப்பான காலமும் பஞ்சமான காலமும் சமாதானமான காலமும் போர் நிறைந்த காலமும் மறைந்து போகும். மரண நேரத்தில் காண்பது போல சமயம் பறந்து செல்வதை நாம் பார்க்கிறோம் கிறிஸ்துவிடம் வந்து அவரில் நிலைத் திருந்தால் அவரே நமது கோட்டையும், அடைக்கல பட்டணமுமாயிருப்பார். நமது **'கடைசி சத்துரு'** விடமிருந்து விடை பெற உதவி பெறுவோம். கிறிஸ்து அவனை முற்றிலும் மேற் கொண்டார். தலையாகிய அவர் பெற்ற வெற்றியால் 'ஜீவிக்கிற அவயவங்களாகிய நாம்' முழுவதும் வெற்றி பெற முடியாது."

அவரது வியாதியின் போது அவரை சந்தித்த ஒருவர்: "நான் ஒரு மனிதனைக் காணச் சென்றேன் அவரது ஒரு கால் கல்லறையிலும் மற்றொரு காலோ பரலோகத்திலும் இருக்கக் கண்டேன்" என்று கூறியுள்ளார்.

அவருடைய சபை மக்களுக்கு அதே சமயத்தில் அவர் எழுதிய கடிதத்தின் சில பகுதிகளைப் பார்ப்போம். –

"உடல் நலிவின் மயக்கத்தோடு என் கல்லறையருகில் நான் நிற்கிறேன். இதற்கு தூரமாக காணப்படுகிற சிலர் எனக்கு முன்னாகவே இதில் விழலாம். எனவே நித்திரையிலிருந்து நாம் விழித்து எழுவோம். வரப்போகும் நமது மாற்றத் திற்காக ஆயத்தமாகி, நமது மாற்றம் சுவிசேஷ அடிப்படையில் சந்தோஷ மானது என நம்புவோம். இதைச் செய்வதற்காக, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதேயுங்கள் என்று உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்".

"நமக்கு நேராக காண்பிக்கப் பட்ட தேவனுடைய நீடிய பொறுமை நம்மை மனந்திரும்புதலுக்கு நடத் தட்டும். உங்கள் பாவங்களை விட்டு விட்டு, இயேசு கிறிஸ்துவை தழுவிக் கொள்ளுங்கள். அவர் கெத்செமெ னேயில் இரத்த வேர்வை சிந்தினார், சிலுவையில் தொங்கினார், மத்தியஸ் தராக சிங்காசனத்திலிருந்து நமக்காகப் பரிந்து பேசுகிறார். இவையெல்லாம் நமக்கு அருகானவைகளும் அருமை யானவைகளுமாகும். மனிதராகக் கிறிஸ்தவர்களாக அந்த மிகப் பெரிய நாளில் உங்கள் பாவங்களோடோ, அவிசுவாசத்தால் கிறிஸ்துவின் எதிரி களாகவோ, அக்கிரமக் கிரியைகளை தேவனுக்கு விரோதமாகச் செய்தவர் களாகவோ என்னை சந்திக்க வேண் டாம். மனந்திரும்புதலின் ஆடை யோடே, கிறிஸ்துவின் தகுதியான வஸ்திரத்தோடே, பரிசுத்தத்தோடே என்னை சந்தியுங்கள். அந்த பரிசுத்த மில்லாமல் ஒருவரும் தேவனை தரிசிக்க முடியாது. உங்களில் சிலர் பாவத்தில் வாழ்ந்தது போதும், மனந்திரும்புதல் மூலம் பழைய மனுஷனையும் அவனது கிரியைகளையும் அழித்துப் போடுங் கள். விசுவாசத்தினாலே ஆண்டவராகிய இயேசுவையும் அவரது நீதியையும் தரித்துக்கொள்ளுங்கள் எல்லா அக்கிர மங்களும் அகன்று போகட்டும். ஒரு புது வாழ்வு ஆரம்பிக்கட்டும். தேவ பக்தியும் அயலான் மேலுள்ள அன்பும் பெருகட் டும்".

"என்ன மகிமை! கர்த்தர் நமது சூரியனும் கிரீடமுமாயிருப்பார்; நாம் முத்துக்களாக நான் உங்கள் கிரீடத் திலும், நீங்கள் எனது கிரீடத்திலும் ஜொலிப்பீர்கள். ஆண்டவரோடு சதா காலங்களிலும் சேர்ந்து வாழப் போகி றோம். தேவனுடைய பரலோக ஆலயத்தில், வானங்களின் வானங்களில் வாழப் போகிறோம். எல்லா நாளுமே ஓய்வு நாளாகவும் நித்திய ஓய்வு நாளாக வுமிருக்கும்."

"உங்களில் சிலர் நான் நித்தி யத்தைக் குறித்தும் உங்கள் விலையேறப் பேற்ற ஆத்துமாக்களைக் குறித்தும் அவற்றின் மதிப்பை தகுதிக்கு அதிக மாகக் கூட்டிப் பேசுவதாக எண்ணு கிறீர்கள். அது மிகப் பெரிய தவறு. உங்கள் ஆவிக்குரிய வாழ்வைக் குறித்து பொதுவாகவும் தனியாகவும் ஆயிரம் மடங்கு அதிகக் கரிசனையற்றவனா யிருப்பது எனக்கு வெட்கமும் துக்கமு மாகும்"

"தேவன் என்னிடம் கிருபையா யிருக்கிறார். சத்துரு எனது சமாதானத் தை குழப்ப இடங்கொடாமல், மரணத் தின் மேல் வெற்றி தருகிறார். இயேசுக் கிறிஸ்து மூலமாக இந்தப் பெரிய வெற்றியைத் தேவன் தருவதற்காக

(6-ம் பக்கம் பார்க்க)

தனி ஜெபத்தில் கவனமாயிருப்போம். இதில் தான் நமது செயல்படும் கிறிஸ்தவ வாழ்வின் இருதயம் அமைந்திருக்கிறது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு நன்றி. தேவ சித்தத்திற்கு முற்றிலும் அர்ப்பணம் செய்வது ஆயிரம் சோதனைகளைத் தடுத்து, நமது இரட்சகரில் வைக்கும் நம்பிக்கை ஆயிரக் கணக்கான சோதனைகளினூடே நம்மை இனிமையாக எடுத்துச் செல்லும்."

ஸ்விட்சர்லாந்துக்கு ஒரு பயணம்

அதிக ஜெபம் ஆலோசனை ஆகியவற்றிக்குப் பின் ஃபிளெச்சர் தனது சொந்த நாட்டை சந்திப்பது தவிர்க்க முடியாதது என தீர்மானித்தார். சுகவீனமாயிருந்தாலும் தனது நிலைமையை முன்னேற்றலாம் என்ற நம்பிக்கையுடன் ஸ்விட்சர்லாந்து பயணத்தை மேற்கொண்டார். அவர் தனது சபையை விட்டு வெளியே சென்ற போது எழுதிய கடிதங்கள் கவனிக்கப் படத்தக்கவை.

ஒவ்வொரு நாளும் உங்களைப் பற்றிய தாழ்ந்த சிந்தனைகளும், கிறிஸ்துவைப் பற்றிய உயர் சிந்தனைகளும், மற்றவர்களைப் பற்றிய இரக்கமான சிந்தனைகளும், சகோதரரைப் பற்றிய உயர் சிந்தனைகளும், உங்களைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றிய நம்பிக்கை நிறைந்த சிந்தனைகளும் என்னில் தோன்றுகின்றன. எங்கிருந்தாலும் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருங்கள். தெய்வீக அன்பாகிய அக்கினியை நரக பாதாள பாவத்தின் மீது கொளுத்துங்கள். சத்தியத்திற்காக திடனாயிருங்கள். அன்பின் வீரர்களாயிருங்கள். பாவத்திற்கு எதிராக இடி முழக்கம் போலவும் தங்களைத் தாழ்த்தும் பாவிகளுக்கு ஆறுதலளிக்கும் மகன்களாகவுமிருங்கள். உங்கள் தெய்வீக சிந்தனையும் சகோதர இரக்கமும் எல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. மற்றவர்கள் உங்களைப் பார்க்கும் போது **'இவர்கள் எவ்வளவாய் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்'**.

உங்களுக்கு பொறுமையும் அதோடு விசுவாசம் வல்லமை ஆகியவை வேண்டும். பாடுபடவும் அதோடு தேவ சித்தம் செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும். அக்கினி போன்ற சோதனைகளையும் கடந்து செல்ல வேண்டும். அவை விசுவாசத்தை நிரூபிக்கவும் பரிசுத்தப்படுத்தவும் பலப்படுத்தவும் ஏதுவாயிருக்கும்.

அவரது கடைசி வருடங்கள்

பெரும்பாலான நாட்களிலும் அவர் தனியாகவே ஊழியத்தில் உழைத்தார். பல வருடங்களுக்கு முன் ஒரு கிறிஸ்தவ பெண்ணை சந்தித்தார். அவள் பெயர் மேரி போஸான் குயட். அவள் மீது அதிக ஈர்ப்புடையவராயிருந்தார். அவள் பெரும் பணக்காரியாயிருந்தபடியால் அவளைப் திருமணம் செய்ய அவர் முயற்சிக்கவில்லை. அவளும் பல ஆண்டுகளாக அவரை மனதில் வைத்து அனேகருக்கு ஆசீர்வாதமாக பணி செய்து கொண்டிருந்தாள்.

ஒரு நாள் அவள் தனது சொந்த வீட்டிலிருந்து துரத்தப்பட்டாள். ஏனெனில் அவள் கர்த்தருடைய ஜனங்களோடு தொடர்பிலிருந்தாள். அவளது உடைமைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவளுடைய சொத்து பறிக்கப்பட்டு தடை நீங்கிய போது இருவரும் 1781 நவம்பர் மாதம் திருமணம் செய்து கொண்டனர்.

நான்கே ஆண்டுகளுக்கு பின் ஆகஸ்டு 1785-ல் ஒரு நாள் முழுவதும் வேலை செய்து விட்டு வீடு திரும்பினார். 'எனக்குச் சளி புடித்திருக்கிறது' என்று மனைவிடம் கூறினார். வெள்ளி, சனி ஆகிய நாட்களில் அதிக வியாதிப் பட்டு, அதிகமாக ஜெபிக்க வழி நடத்தப்பட்டார். அதிகக் காய்ச்சலோடே வழக்கம் போல ஞாயிறு பிரசங்கித்தார். அவருக்குச் சரியாக நிற்க முடியவில்லை. எல்லாருடைய கண்களும் அவரை நோக்கிக் கொண்டிருந்தன. ஆனால் பிரசங்கிக்க ஆரம்பித்த போது அவர் அதிக பெலனடைந்தார். அவரது பழைய சுயாதீனமும் சக்தியும் திரும்ப வந்தன. அவர் கொடுத்த செய்தி சபை மக்களை அசைத்தது. பின்பு கர்த்தருடைய பந்திக்கு தலைமை தாங்கினார். அப்போது அவரது பெலவீனம் திரும்ப வந்தது. மரிக்கவிருந்த கரங்களால் அப்பத்தைப் பகிர்ந்தளித்தார். இறுதியில் மூர்ச்சையடைந்தபடியால் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

அடுத்த வாரம் கணவனும் மனைவியும் சேர்ந்து ஆண்டவரை மகிமைப்படுத்தினார்கள். தேவன் தமது அன்பை அவருக்கு வெளிப்படுத்திய படியால் சத்தமாக அவரை துதித்துக் கொண்டிருந்தார். "தேவன் அன்பாகவே இருக்கிறார், அன்பு அன்பு, அதற்காக நன்றி" சனிக்கிழமை அவரது பெலனும் மூச்சும் பெலவீனப்பட்டன. ஞாயிறு வரை சமாதானமாக தேவனில் இளைப்பாறினார். ஆகஸ்ட் 14-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை அவரது ஆத்துமா ஆண்டவரின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தது. அவர் மரிக்கும் போது அவரது வயது 55.

நமது குளிர்ந்த ஜெபங்கள் நெருப்பில்லாத பலிகளாயிருக்கின்றன.

இன்றியமையாத தேவ வசனம்

The indispensable word of God

Andrew Murray (1828-1917)

"...மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்." (மத்.4:4)

அப்பம் வாழ்வுக்கு இன்றியமையாதது

இது எல்லாருக்கும் தெரிந்தது. எந்த பெலசாலியான மனிதனும் உணவு உண்ணாவிடில் பெலவீனமடைந்து உயிரிழப்பான். அது போலவே வேத வசனம் பரலோக தத்துவத்தையுடைய தாயிருந்து, வல்லமையாய்க் கிரியை செய்ய வல்லது.

அப்பம் சாப்பிடப்பட வேண்டும்

"...கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." (சங்.1:2) என்னிடத்தில் எவ்வளவாக உணவு இருந்தாலும் அதை நான் உண்ணாவிடில் மரிக்க வேண்டியது தான். வேத வசனத்தை உட்கொண்டு இருதயத்திலும் வாழ்விலும் பயன்படுத்த வேண்டும். "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்றேன்! நாள் முழுதும் அது என் தியானம்" (சங்.119:97). ஒரு பெலனுள்ள ஆவிக்குரிய வாழ்விற்கு ஒவ்வொரு நாளும் வேத வசனம் இன்றியமையாதது.

உலகத்தில் வாழ்ந்த நாட்களில் ஆண்டவராகிய இயேசு பிதாவின் வசனத்தைக் கற்று, நேசித்து, கீழ்ப்படிந்தார். அவருடைய உறவைப் பெற்றுக் கொள்ள அவருடைய வசனம் மிகத் தேவை. பிதாவோடு ஐக்கியம் கொள்ள வசனம் மூலம் கிறிஸ்து போதிக்கிறார். அவரைப் போல கற்று, வாழ்ந்து தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம்.

எப்படி வேத வசனத்தை வாசிக்க வேண்டும்?

மிகுந்த கனத்தோடு வேத வசனத்தை வாசிக்க வேண்டும்

ஒரு நிமிடம் மௌனமாக தேவனிடத்திலிருந்து வேத வசனம் வந்தது என்பதை தியானியுங்கள். கனத்தோடு அவரை குனிந்து வணங்குங்கள். அமைதியாயிருங்கள். தேவன் தாமே தமது வசனத்தை உங்களுக்கு வெளிப் படுத்தட்டும்.

மிகுந்த கவனத்தோடு வாசிக்க வேண்டும்

கவலையீனமாக வேதத்தை வாசித்தால், அதில் பயனில்லை. அதன் பொருளை மனித மூளையால் புரிந்து கொள்ள முடியாது. அதன் மேலோட்டத்தைப் பார்க்க முடியுமே தவிர அதன் ஆழங்களுக்குள் செல்ல முடியாது. ஒரு விசேஷித்த காரியத்தை ஒருவர் சொல்லும் போது நாம் முழு கவனத்தையும் செலுத்துவோமல்லவா! தேவனுடைய சிந்தனைகள் எவ்வளவு மேலானவை? "...உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகள் உயர்ந்திருக்கிறது."(ஏசா. 55:9) வசனங்களின் மேலோட்டமான கருத்துக்களைக் கூட மிகுந்த கவனத்தோடு புரிந்து கொள்ள பிரயாசப்பட வேண்டும். ஆவிக்குரிய கருத்துக்களை புரிந்து கொள்வது எவ்வளவு கடினம்?.

தேவ ஆவியின் நடத்துதலின் எதிர்பார்ப்போடு வேதத்தை வாசிக்க வேண்டும்

நமது இருதயங்களிலும் வாழ்விலும் வேத வசனம் வல்லமையாய் செயல்பட ஆவியானவர் உதவி செய்ய வேண்டும். 119-ம் சங்கீதத்தில் தன்னைப் போதிக்கவும், கண்களைத் திறக்கவும், தேவனுடைய பாதையில் தன்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இருதயத்தைச் சாயப் பண்ணவும் உத்தமமாக தாவீது ஜெபிக்கிறார். வேதத்தைப் படிக்கும் போது வேத வசனமும், தேவ ஆவியானவரும் பிரிக்க முடியாதவை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இரவும் பகலும் இருதயத்திலும் வாழ்விலும் பயன்படுத்தும் நோக்கத்தோடு வேதபுத்தகத்தை வாசிக்க வேண்டும்

முழு இருதயமும், முழு வாழ்வும் வசனத்துக்குக் கீழ்ப்பட வேண்டும். 'உம்முடைய வேதத்தை எவ்வளவாக நேசிக்கிறேன்! அது நாள் முழுவதும் என் தியானம்' என்று தாவீது பாடுகிறார். எனவே தனது அனுதின பணியின் மத்தியில், விசுவாசி வேத வசனத்தை இருதயத்தில் காத்து, அதை தியானிக்க முடியும். வேத வசனத்தை முழுமனதோடு இருதயத்தில் ஏற்றுக் கொள்ளு மட்டும் மறுபடியும் மறுபடியும் 119-ம் சங்கீதத்தை படித்து, அவர் உங்களுக்குப் போதித்து, புரிய வைத்து அவற்றை வாழ்வில் நிறை வேற்ற ஜெபிக்க வேண்டும்.

வசனமும் ஜெபமும்

"...கர்த்தாவே உம்முடைய வசனத்தின் படியே என்னை உயிர்ப் பியும்." *(சங்.119:107)*

ஜெபமும் வேத வாசிப்பும் இணைந்து செல்ல வேண்டும். வேத வாசிப்பில் தேவன் நம்மோடு பேசு கிறார். ஜெபத்தில் நாம் தேவனோடு பேசுகிறோம். உண்மையான உறவுக்கு இருவரின் பங்களிப்பும் அவசியம். வேத வசனத்தை பயன் படுத்தாமல் நான் ஜெபிக்க மட்டும் செய்தால் எனது வார்த்தைகளையும் சிந்தனையையுமே பயன்படுத்துகிறேன். வேத வசனத் தோடு நாம் ஜெபிக்கும் போது ஜெபம் வல்லமை பெறுகிறது. உத்தம ஜெபத்திற்கு தேவனுடைய வார்த்தை இன்றியமையாதது.

ஜெபிக்கும் போது தேவனைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். வேத வசனத்தின் மூலமாகவே தூய ஆவியானவர் அவரது சரியான சிந்தனை களை நமக்கு தெரிவிக்கிறார். வசனம், நாம் எவ்வளவு கொடிய பாவிகள் என நமக்கு வெளிக் காட்டுகிறது. தேவன் நமக்குச் செய்யவிருக்கும் அற்புதங் களையெல்லாம் அது காண்பிக்கிறது. அவரது சித்தம் செய்ய பலப்படுத்து கிறது. உறுதியான வாஞ்சையோடும், திட விசுவாசத்தோடும், வாழ போதிக் கிறது. நான் எப்படி இருக்கிறே னென்றல்ல, தேவ கிருபையால் எப்படி ஆக வேண்டுமென்று போதிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்து மகா பெரிய மன்றாட்டு வீரர் என்றும் அவரது நாமத்தில் ஜெபிக்க என்னை அனுமதிக் கிறார் என்றும் நினைவுபடுத்துகிறது.

பிரசங்கங்கள், புத்தகங்கள், கைப்பிரதிகள், குழு கூடுகைகள், நல்ல மக்களின் கூட்டுறவு எல்லாம் நல்லவைதான். ஆனால் ஜெபம் அவற்றிற்கு ஈடாகாது.

கிறிஸ்தவனே, இது ஒரு பெரிய சத்தியம். இதனை கற்றுக்கொள். ஒவ்வொரு நாளும் உனது பெலனை வேத வசனத்தால் புதுப்பித்து, அவரது சித்தத்தின்படி ஜெபிப்பாயாக.

வேத வசனத்தை வாசிப்ப தற்கும் ஜெபம் அவசியம். வேத வசனத் தை புரிந்து கொள்ளவும், தூய ஆவியின் மூலம் வேத வசனத்தை அறிந்து பயன் படுத்தவும், கிறிஸ்துவே எல்லாவற் றிற்கும் எல்லாமானவர். என்று கண்டு கொள்ளவும் ஜெபிக்க வேண்டும்.

கிறிஸ்துவில் வேத வசனம், ஜெபம் மூலமாக தேவனை கிட்டிச் சேர பயன்படும். என் உள்ளிந்திரியமே, என்னை தேவனுக்கும் அவரது சேவைக்கும் ஒப்புவிக்கிறேன். நான் தூய ஆவியால் பலப்படுத்தப்பட்டு அவரது அன்பு இருதயத்தில் ஊற்றப்பட்டு, அனுதினமும் நான் அவர் அன்பில் நடக்கட்டும்.

நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்

Be Still, and know that He is God

Thomas Reade (1776 -1841)

என் ஆத்துமாவே, கர்த்தர் ஆளுகிறார். மகிழ்ந்து களிகூரு! அவர் மனதின் கோர அலைகளை அமைதிப் படுத்துகிறவர். உள்ளான புயலை அடக்குகிறவர். துக்கத்தால் சோர்ந்த இருதயத்தில் உயிருள்ள கதிரை அனுப்பி அதிலே அமைதியும் இனிமை யுமான சமாதானம் ஆளும்படி செய் வார். கர்த்தரில் எப்போதும் நம்பிக்கை யாயிருப்போம். 'நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள் ளுங்கள்' *(சங்.46:10)*.

அவர் உலகம் முழுவதும் ஆளுகிறவரும், தேசங்களின் எதிர்காலங் களை கரத்தில் வைத்திருப்பவரும் குடும்பங்களின் சிறு சிறு காரியங்களில் கரிசனையுள்ளவரும், தனி நபர்கள் மேல் கவலைப்படுகிறவரும் நமது பிதாவும் நண்பருமாயிருக்கிறார். எவ்வளவாக அவரையும், அவரது வல்லமையையும், ஞானத்தையும், அன்பையும், உத்தமத்தையும், சத்தியத் தையும் அறிகிறோமோ அவ்வளவாக அவரது சிங்காசனத்திற்கு முன்பாக தாழ்மையுடனும் வணக்கத்துடனும் உறுதியுடனும் அன்புடனும் குனிந்து வணங்குவோம். சூழ்நிலைகள், புயல்கள் மத்தியிலும் தேவனை நமது தேவனாக அறிந்து கொள்வது உண்மையான சமாதானத்தின் இரகசியத்திற்கு ஆதார மாயிருக்கிறது. இந்த அறிவு நம்மை இந்த உலகின் அதிர்வுகளுக்கு மேலாகத் தூக்கி நமது ஆத்துமா சுயாதீனமாக தனது வலிமையை விரிவாக்கி பயன் படுத்த உதவும். ஆண்டவருடைய பரிபூரணத்தை விசுவாசம் புகழ்ச்சி யுடன் நோக்கும். நம்பிக்கை அதன் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற இந்த பரிபூரணத்தை ஆதாரமாக்குகிறது. அன்பு இவற்றில் மகிழ்ந்து களிகூறுகிறது. பொறுமை அமைதியாகக் காத்து நின்று அதிக ஆசீர்வாதமான அறுவடையைத் திரளாகப் பெற்றுக் கொள்கிறது.

எனவே ஆத்துமாவே வந்து தேவனை நம்புவதாலுள்ள ஆசீர்வாதங் களைக் கற்றுக்கொள். "அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை." யாத்.1:17. அவரது வாக்குத்தத்தங்களெல்லாம் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கின்றன. அவரது வழிகளெல்லாம் நீதியும் உண்மையுமானவை. உங்கள் கவலை களையெல்லாம் அவர் மேல் வைத்து, அமைதியாயிருந்து அவரே தேவ னென்று அறிந்து கொள்ளுங்கள்.

கர்த்தர் ஆளுகிறார்

தேவனுடைய நோக்கங்கள் சீராகவும், நேரடியாகவும் அவற்றின் நிறைவேற்றத்தை நோக்கி நகர்ந்து செல்கின்றன. அனேக காரியங்கள் நமது குறுகிய பார்வையால் அவரது திட்டத் தைத் தடுப்பது போலிருக்கலாம். எனவே தாவீதோடு சேர்ந்து "**நான் மனிதன் கையில் விழாதிருப்பேனாக**" *(2 சாமு. 24:14)*. என்று சொல்வோம். இது ஏமாற்றத்தின் மொழியல்ல. மனிதன் ஒரு போதும் உயர்ந்தவனோ வல்லவனோ அல்ல. "**கர்த்தர் அரசாட்சி செய்கிறார்.**" *(சங்.96:10)* என்று தாவீது பாடும் போது சரியான உறுதியிலிருந்தார். பரலோகத்தில் வாழும் இரட்சிக்கப்பட்ட, வெற்றி யாளர்களின் கீதம் அது. "...சர்வ வல்ல மையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்ய பாரம் பண்ணுகிறார்." வெளி.19:6.

அவரது திட்டம் எதாவது காரணியால் மாற்றப்படுமா? இல்லவே இல்லை. நித்திய திட்டங்கள் அவரது சித்தத்தில் ஆரம்பித்து அவரது மகிமை யில் முடிவடைகின்றன. இதற்கு மேலா கவும் தூரமாகவும் நாம் செல்ல முடி யாது. "நான் அல்பாவும் ஓமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தி னவருமாயிருக்கிறேன்." *(வெளி.22:13)*

மேகங்களும், அந்தகாரமும் நித்தியமானவருடைய சிங்காசனத்தை மூடி அவரது பிரகாசமான திட்டத்தை மறைக்கலாம். ஆனால் விசுவாசம் அந்தத் திரையினை ஊடுருவி இருளி னூடே இம்மானுவேலின் ராஜ்யத்தின் எழும்பி வரும் மகிமையின் காட்சியைக் காணும்.

அதிக ஆசீர்வாதங்கள்

உண்மையான மார்க்கத்தின் ஆசீர்வாதம் எத்தனை பெரியது! எத்தனை பெரிய சாவகாசத்தைப் பெற்றவன் தேவ பிள்ளை! தெய்வீக அனுமதியின்றி எதுவும் நடக்காது. "**அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்**

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு, சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிற தென்று அறிந்திருக்கிறோம்."(ரோமர் 8:28

சாத்தான் ஆத்திரப்படலாம், உலகம் முகம் சுளிக்கலாம். மாம்சம் புரட்சி செய்யலாம். எல்லாம் தாண்டிச் செல்வது போல தோன்றலாம். இவைகளின் மத்தியில் கிறிஸ்தவனின் ஆத்துமா பாதுகாவலாயிருக்கிறது. **'தேவனுக்குள் கிறிஸ்துவோடு மறைந்திருக்கிறது'** (கொலோ.3:3) 'பாரஞ் சுமந்து தவிக்கலாம்' (2 கொரி.5:4) ஆனாலும் அவன் மகிழ்ந்து களி கூருவான். காலங்களால் மறைக்கப் பட்டிருக்கும் திரைக்குப் பின்னால் நித்தியத்தின் மகிமைகளை அவன் காண்பான். இந்த நிலையிலிருந்து கடந்து நித்திய வாழ்வுக்குச் செல்லும் சந்தோஷமான எதிர்பார்ப்பில் அவன் மகிழ்ச்சியாயிருப்பான்.

குழந்தையைப் போன்ற எளிமையோடு தேவ வசனத்தை ஏற்றுக் கொள்கிறவனும் அதை செயல்படுத்து பவனும் மகிழ்ச்சியாயிருப்பான். எல்லாவற்றிலும் அவன் தேவனைக் காண்பான். மறைந்திருக்கும் மன்னாவைப் புசிப்பான். வாக்குத்தத்தங்கள் யாவும் சத்தியமும், ஆறுதலும் நிறைந்தவை எனக் கண்டுகொள்வான்.

மகிமையான நாட்கள் விரைந்து வருவதால் புயல் நிறைந்த இரவால் மனம் தளர்ந்து போவதில்லை. அவனது பயங்களைப் போக்க கிருபை நிறைந்த வார்த்தைகளைப் பிதாவானவர் பேசுவதை அவன் கேட்பான். 'நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள் 'அதனால் முழு சமாதானத்தோடு முன்னேறுவான்.

எனவே, ஆத்துமாவே தைரிய மாயிரு. தாவீதோடு சேர்ந்து **'தேவன் எனக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்'** (சங் 46:1) எனப் பாடு. தேவனுக்கு மட்டும் பயப்படு. அவரது வாக்குத்தத்தங்களை விசுவாசி. அவரை நேசித்து சேவி. இவையெல்லாம் இணைந்து நன்மையாய் முடியும்.

தேவ பிள்ளைகளாக ஜெபத்தின் முக்கியத்துவங்களை நாம் உணர்ந்தால், தொழிலுக்காக உலக இன்பங்களுக்காக ஓடுவதற்கு பதிலாக முழங்கால்களை முடக்குவோம்.

மிகப்பெரிய ஊழியம் ஜெபமாகும்

Prayer - The greatest Ministry

E.M.Beyerle

அதிகமான ஜெபத்துடனும் தியானத்துடனும் **'மிகப் பெரிய ஊழியம் ஜெபமாகும்'** என்பதை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். அதற்கான சில காரணங்களைக் கீழே குறிப்பிடுகிறோம்:-

1. ஜெபம் மிகத் தூரமான களங்களை எட்டக்கூடியது. இது இருக்கிற இடத்திலேயே செய்யக் கூடியது. பண செலவு மிக குறைவு. உலகெங்குமுள்ளவர்களால் செய்யக் கூடியது.

2. தேவ நாம மகிமைக்காக ஏறெடுக்கப்பட்டால் நித்தியத்தில் பலனைத் தருவது நிச்சயம். இது ஒரு இரகசிய ஊழியம். அதிக நேரம் இதில் செலவிடப்பட வேண்டும்.

3. இது கிடைப்பதற்கரிய ஊழியம் ஆனால் இது மிகுந்த விலை யேறப் பெற்றது. இது மெச்சத்தக்க ஊழியம் என்றாலும் நமக்கு பொருத்த மானதாய் தோன்றாது. எனென்றால் இது வெளிப்படையான பகட்டான ஊழியம் அல்ல. மறைவான அறை வீட்டு ஊழியம். அனேகருக்கு இது எரிச்சலூட்டுவதாயும் சலிப்பூட்டு வதுமாயுமிருக்கிறது.

4. தேவனுடைய கரத்தைத் தளர்த்துகிறது: வேல்ஸ் எழுப்புதலின் போது தேவன் கிருபையாய் இறங்கியதை **R.B.Jones** சொல்லும் போது "தேவனது செயல்பாடுகள் சன்மார்க்க ஆவிக்குரிய மண்டலங்களில் மக்களின் ஜெபத்தால் ஏற்பட்ட தேவனுடைய இருதயத்தின் பதிலும் வலிமையு மாகும்" என்கிறார். **ஜான் வெஸ்லியும்** இதைப் போன்ற ஒரு கூற்றைக் கூறுகிறார். "**தமது ஜனங்களின் ஜெபக்கிற்குப் பதில் அளிப்பதைத் தவிர தேவன் வேறு எதையும் செய்வதில்லை.**" தேவ பிள்ளைகளாக இந்த கூற்றுகளையும் இவற்றின் முக்கியத்துவங்களையும் நாம் உணர்ந்தால், அழிந்து போகும் இவ்வுலக தொழிலுக்காக இன்பங்களுக்காக ஓடுவதற்கு பதிலாக நம் முழங்கால்களை முடக்குவோம்.

5. பரலோகத்தில் பரிசுத்தர் களில் பரிசுத்தராயிருக்கும் கிறிஸ்துவோடு இணைந்த பணி இது: 'உன்னதங்களில் மறைவிடங்களில் வாழும் அவரோடு உறவு கொள்கிறோம்.' அவர் தேவ குமாரன். இழந்து போன தமது ஜனங்களுக்காக மனவுருக்கத்தோடு பரிந்து பேசுகிறார்.

6. இது ஒரு ஈகையின் ஊழியம்: "...ஆசாரிய ஊழியத்தை உங்களுக்குத் தத்தமாக அருளினேன் " (எண்.18:7). ஆண்டவர் உலகத்தின் சகல பொக்கிஷங்களும் வைக்கப்பட்டிருக்கும் பண்டகசாலையின் தங்கச்சாவியை உங்கள் கரத்தில் கொடுத்தால் எவ்வளவு உத்தமமாக சந்தோஷமாக அதை பயன்படுத்தியிருப்போம். அதுபோல தேவன் பரலோகத்தின் மகிமை, வல்லமை, ஐசுவரியம், கிருபை எல்லாவற்றையும் தந்தளிக்கக்கூடிய திறவு கோலாகிய ஜெபத்தை நம்மிடம் தந்துள்ளார். **நாம் ஏன் அதனை மதிக்காமலும் பயன் படுத்தாமலும் இருக்கிறோம்?**

ஜெபம் மிகப் பெரிய ஊழியமானால் அதற்கு கிரயமும் அதிகம். "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார்" (சங்.65:18). **சத்துருவின் குற்றச்சாட்டிற்குப் பயந்து ஜெபத்தை நாம் நிறுத்த வேண்டியதில்லை.** ஆனால் தேவைகளை அளவிட தவறிவிடாதபடி மென்மையாக நாம் நடந்து கொள்ள வேண்டும்.

உன்னதங்களிலிருக்கிற கர்த்தரை சங்.24:3-4 தெளிவாக விளக்குகின்றன. "**யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்?**" அல்லது "**யார் கர்த்தருடைய பர்வதத்தில் நிலைத்திருப்பான்?**"சங்.15-ம் இதே விஷயத்தை விவரிக்கிறது. அவற்றை மறுபடியும் மறுபடியும் வாசித்து பயபத்தியுடன் அவரது சன்னிதானத்தில் பிரவேசித்து ஆசாரியராகப் துயரத்திலிருக்கும் மக்களுக்காக பாவம் நிறைந்த உலகுக் காக ஊழியம் செய்வோம்.

"**என்னை நோக்கிக் கூப்பிடு, அப்போழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.** " (எரே.33:3)

தமது ஜனங்களின் ஜெபத்திற்குப் பதில் அளிப்பதைத் தவிர தேவன் வேறு எதையும் செய்வதில்லை.
ஜான் வெஸ்லி

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

தேவன் பரலோகத்தின் மகிமை, வல்லமை, ஐசுவரியம், கிருபை எல்லாவற்றையும் தந்தளிக்கக்கூடிய திறவு கோலாகிய **ஜெபத்தை** நம்மிடம் தந்துள்ளார். நாம் ஏன் அதனை மதிக்காமலும் பயன்படுத்தாமலும் இருக்கிறோம்?

சத்துருவின் குற்றச்சாட்டிற்குப் பயந்து **ஜெபத்தை** நாம் நிறுத்த வேண்டியதில்லை.

வில்லுக்கு அம்பு எவ்வளவு பயனுள்ளதோ அதே போல் **ஜெபம்** கேட்கப்பட விசுவாசம் அவசியம்.

ஜெபத்தில் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்களைக் குறித்து கவலையீனமாயிருப்பவர்கள் ஜெபத்தில் உறுதியாயிருக்க முடியாது.

உலகத்தோடு பேசுவதற்கு முன்னால் **தேவனோடு** பேசுங்கள். வேலைகள் முடிந்த பின் இரவிலும் பேசுங்கள்.

ஜெபம் மிக முக்கியமானது என்பது மனதிலிருக்கட்டும். எந்த வேலையைக் காட்டிலும் **ஜெபம்** மிக முக்கியமானது.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason